# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2383/45 - 2024 මැයි මස 11 වැනි සෙනසුරාදා - 2024.05.11

*2383/45 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PB 1437 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் இல. 36, டீ கிரெஸ்டர் இடம், ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04 இல் அமைந்துள்ளதுமான இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2022, ஒற்றோபர் 10 ஆந் திகதிய 2302/ 17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் “மென்பொருள் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி” என்னும் பதிவையும் நிரல் II இல் உள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் இணையப் பாதுகாப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு விஞ்ஞான இளமாணி, தரவு விஞ்ஞானத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு விஞ்ஞான இளமாணி மற்றும் செயற்கை நுண்ணறிவில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு

விஞ்ஞான இளமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது ; பின்வரும் குறைந்தபட்ச குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் ;

(அ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர் தரத்தில்) பௌதிக விஞ்ஞான பாடத்துறையில் அல்லது பொறியியல் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ; அல்லது

(ஆ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் மற்றும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் அமர்வில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சாதாரண தரத்தில்) கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ; அல்லது

(இ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சாதாரண தரத்தில்) கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றுடன் அதற்குச் சமமான தகைமைகள்.

2. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| இணையப் பாதுகாப்பில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு விஞ்ஞான இளமாணி | ததொ பீஎஸ்சீ சிறப்பு (இணையப் பாதுகாப்பு) |
| தரவு விஞ்ஞானத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு விஞ்ஞான இளமாணி | ததொ பீஎஸ்சீ சிறப்பு (தரவு விஞ்ஞானம்) |
| செயற்கை நுண்ணறிவில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு விஞ்ஞான இளமாணி | ததொ பீஎஸ்சீ சிறப்பு (செயற்கை நுண்ணறிவு) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2024, ஏப்பிறல் 25.

EOG 05-0089

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.